**ARTICLE 07 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00023**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 32–37
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# தென்தமிழகக் கிறித்தவ மதமாற்றமும் சாதியும்

**அனுஷா மா[1,*], முனைவர் .ஜென்ஸிஸ் குமார்., மி.[2]**
[1]முனைவர் பட்ட ஆய்வாளர்,பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.கேரளம் 695034., India
[2]இணைப்பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.கேரளம் 695034., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** அனுஷா மா — anushaaziphabari@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தென்னிந்தியாவில் கிறித்தவ மதத்தின் வருகை குறிப்பிடத்தக்கது. வணிக நோக்கோடு உள் நுழைந்த காலனிய ஆட்சியாளர்கள் பின்னர் மதபரப்புதலையும் மேற்கொண்டனர்.சமத்துவத்தைப் போதித்த கிறித்தவத்தின் செயல்பாடுகள் இதுவரை சமத்துவத்தைக் கண்டிராத அடித்தள மக்களை ஈர்த்தது. இதனால் பெரும்பாலான விளிம்புநிலை மக்கள் கிறித்தவத்திற்கு மதம் மாறினர். ஆதிக்க வகுப்பினரில் பெரும்பான்மையினர் சமூக, பொருளாதார உயர்வுக்காக மதமாற்றத்தை மேற்கொண்டனர். இங்கு நிலவியிருந்த சாதியச் சமூகக் கட்டமைப்பில் ஊறியிருந்த ஆதிக்க வகுப்பினரால் அடித்தள மக்கள் தங்களுக்குச் சரிசமமாக கிறத்தவத்தில் நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதன் விளைவாக, கிறித்தவத்தில் சாதிய வேறுபாடுகள் தோன்றின.ஒரு பங்கில் ஒரே பிரிவைச் சார்ந்தவர்கள் இருக்கும்போது எவ்விதச் சிக்கலும் ஏற்படுவதில்லை. மாறாக, ஒன்றுக்கு மேற்பட்ட சாதியினரைச் சார்ந்தவர்கள் இருக்கையில் அங்கு சாதிய ஏற்றத்தாழ்வுகள் உருவாகின்றன. ஆலயத்திற்குள் இருவகுப்பினரும் ஒன்றாக அமர்வதை கிறித்தவம் ஏற்றுக்கொண்டாலும்,சாதியச் சிந்தனையுடைய மேல்தட்டு வகுப்பினரால் அதை ஏற்க முடியவில்லை. இவ்வாறு மதமாற்றத்திற்குப் பின்பும் சாதி அடையாளங்களும் அதன் அடிப்படையிலான வேறுபாடுகளும் பல்வேறு வடிவங்களில் கிறித்தவத்தில் தொடர்ந்ததை தொடர்வதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** மதமாற்றம்; கிறித்தவம்; சாதி; கத்தோலிக்கம்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** மா, அ., & மி., மு. . கு. (2026). தென்தமிழகக் கிறித்தவ மதமாற்றமும் சாதியும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

தென்னிந்தியச் சமூக வரலாற்றில் கிறித்தவ மதத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது.புனித தோமாவின் வருகையினால் கிறித்தவம் வந்ததாகக் கூறப்படுகிறது எனினும், இடைக்காலத்தில் போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் போன்ற ஆட்சியாளர்களின் ஈடுபாட்டால் கிறித்தவ மதம் இந்தியாவின் பெரும்பகுதிகளில் வேரூன்றியது. வணிக நோக்கோடு உள்நுழைந்த காலனிய ஆட்சியாளர்கள் பின்னர் கிறித்தவ மதப்பரப்புதலையும் மேற்கொண்டனர்.கிறித்தவத்தின் வருகை தென்னிந்தியச் சமூகத்தில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தியது.இந்நிலையில் கிறித்தவத்தின் வருகையும், மதமாற்றமும் சாதிய அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியதா ? என்பதை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## மதமாற்றக் காரணிகள்

போர்ச்சுக்கீசியர் வருகையினால் பதினைந்தாம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் கிறித்தவம் தென்னகத்தில் நுழைந்தது. தமிழகத்தை பொறுத்தமட்டில் பரதவர்களை அரேபியர்களிடமிருந்து போர்ச்சுக்கீசியர்கள் காப்பாற்றியதன் பொருட்டு பரதவர்கள் குழுமமாக கிறித்தவத்திற்கு மதம் மாறினார். மேலும் போர்ச்சுக்கீசிய சேசு சபையினர் தமிழகக் கடற்கரைப் பட்டினங்களுக்குப் பின்புலமாக இருந்த கிராமங்களுக்குச் சென்று அங்கு வாழ்ந்திருந்த மக்களை அணுகி கிறித்தவத்தைப் போதித்து மதமாற்றம் செய்தனர்.

பொருளாதார மற்றும் சமூக உயர்வுக்காகவுமே பெரும்பாலான ஆதிக்க வகுப்பினர் மதம் மாறினர். சாதியிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்ட உயர்சாதியினரும் வேறு வழியில்லாமல் இஸ்லாம் அல்லது கிறித்தவ மதத்தை தழுவினர்.கோவாவில் நடந்த மதமாற்ற நிகழ்ச்சியைப் பற்றி பாக்ஸர் எனும் வரலாற்றாசிரியர் குறிப்பிடுகையில், திருவிழா ஊர்வலத்தின் போது சேசு சபையினர் அடிமைகளை வைத்து கோவானிய இந்துவைப் பிடித்து உதட்டில் மாட்டுக்கறியைத் தேய்த்து மதமாற்றம் செய்ததாகக் குறிப்பிடுகிறார் (ஆ.சிவசுப்பிரமணியன்:2025).இவ்வணுகுமுறை, கட்டாய மதமாற்றம் நிலவியிருந்ததைப் புலப்படுத்துகிறது.

ஆளும் வர்க்கத்தினரை ஈர்க்க நினைத்த கிறித்தவ மதபோதகர்கள் ,ஒவ்வொருப் பிரிவாகப் பிரிந்து மதமாற்றச் செயல்களில் ஈடுபட்டனர். சேசு சபைத் துறவியான இராபர்ட்.டி.நோபிலி காவி சந்நியாசி வேடமணிந்து, புலால் உணவைத் தவிர்த்து பிராமணர்களை மதமாற்றம் செய்யும் முயற்சியை மேற்கொண்டார். வெள்ளாளர் வகுப்பிலிருந்து பண்டாரச் சாமிகளை உருவாக்கி மற்ற சாதியினரையும் மதமாறச் செய்யும் செயல்களில் ஈடுபட வைத்தார்.(ஆ.சிவசுப்பிரமணியன்:2025).

தென்னிந்தியச் சூழலில் நிலவியிருந்த பல்வேறு பண்பாட்டு அடையாள ஒடுக்குமுறைகள், அடிமை முறை,தீண்டாமை, கொத்தடிமை முறை மற்றும் சாதியச் சமூக இறுக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் வழிமுறையாக அடித்தள மக்கள் மதமாற்றத்தைக் கண்டனர். இது மட்டுமல்லாது, 1876-ல் துவங்கியத் தாது வருடப் பஞ்சம் பெரும்பாலான அடித்தள மக்கள் குழும மதமாற்றத்தை மேற்கொள்ள முக்கியக் காரணியாக அமைந்தது.

சொத்துரிமை மற்றும் ஜமீன்தாரின் பாலியல் தொல்லையிலிருந்து குடும்பப் பெண்களை பாதுகாக்கவும் மதமாற்றத்தை மேற்கொண்டனர்.கழுகுமலை நாடார்கள் இரத வீதியில் பல்லக்கு ஊர்வலம் செல்ல உரிமை பெற்றுத் தருவதாக இருந்தால் கிறித்தவத்திற்கு மதம் மாறுவதாகக் கூறியமையை ஜார்ஜ் சே.ச பதிவு செய்கிறார்(கழுகுமலையில் கிளர்ச்சியும் வளர்ச்சியும் 1895:2025).

சமூகத்தில் சில வகுப்பினருக்கு மட்டுமே உரிமையுடையதாக இருந்த கல்வி, மருத்துவம் மற்றும் வேலை வாய்ப்புப் போன்றச் சமூக அமைப்புகளைத் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் கிடைக்கும்படியாக கிறித்தவ மிஷனரிகள் முன்னெடுத்த முயற்சிகள் குழும மதமாற்றத்திற்கு வழி வகுத்தது.

## மதமாற்றமும் சாதியும்

பிராமணர்கள் வேதத்தைத் மறை பொருளாக வைத்தது போன்று அல்லாமல்,கிறித்தவம் வேதத்தை அனைவரும் பயன்பெறுமாறு அனுமதித்தது.சைவ, வைணவ மத கோயில்களில் வழிபாடு மறுக்கப்பட்டவர்களை கிறித்தவ ஆலயங்கள் பேதமின்றி வரவேற்றன.

அடித்தள மக்களை ஈர்க்கும் பொருட்டு அவர்கள் ஏற்கனவே பின்பற்றியிருந்த நாட்டார் வழிபாடுகளுக்கு சமானமான புனிதர் வழிபாடு, அசனம் கொடுத்தல், தேர் ஊர்வலம், மொட்டை அடித்தல் போன்ற சடங்குகளை முன்வைத்து கத்தோலிக்கத் திருச்சபை மதமாற்றத்தை மேற்கொண்டதேத் தவிர விவிலியத்திற்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை. அதற்கு பதிலாக பத்து கட்டளைகள் ,திருச்சபை கட்டளைகள் போன்ற அடிப்படைச் சமய விதிகளும் மந்திரங்களுமே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன (ஆ.சிவசுப்பிரமணியன்:2023).இங்ஙனம் கிறித்தவச் சமய வழிபாட்டு முறைகள் மரபு வழி மதஅடையாளங்களுக்கு உட்படுத்தி மக்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டன.

உள்நாட்டுப் பகுதியிலும் கிறித்தவத்தைப் பரப்புவதற்காக மதுரையை மையமாகக்கொண்டு கி.பி1601-ல் மறைத்தளம் உருவாக்கப்பட்டது.இம்மறைத்தளம் மதுரை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் முத்துக்குளித்துறை மறைத்தளங்களான கன்னியாகுமரி முதல் வேலூர் வரையிலான கடலோரப் பகுதிகளையும் உள்ளடக்கியது.இங்கு பணிபுரிய வந்த இராபர்ட்.டி.நோபிலி, சாதியின் செல்வாக்கை அறிந்து கொண்டு, ஆதிக்க வர்க்கத்தினரை மதமாற்றம் செய்தார். அவர் “கிறித்தவர்களாக மதம் மாறுபவர்கள் சாதியையோ, சாதிய அடையாளங்களையோ, சாதியப் பழக்கங்களையோ, சமூக உயர்நிலையையோ விட்டுவிடத் தேவையில்லை” என்று தனது இருப்பிடத்தில் எழுதி வைத்திருந்தார் என்பதை ஆ.சிவசுப்பிரமணியன் பதிவு செய்கிறார்(கிறித்தவமும் சாதியும்:2025).இச்செயல் சாதியம் கிறித்தவத்தில் ஊடுருவ வழி வகுத்தது.

கிறித்தவத்தில் நிலவிய சமத்துவம் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு மகிழ்வைப் பெற்றுத் தந்தாலும்,சாதியக் கட்டமைப்புச் சமுதாயத்தில் மூழ்கியிருந்த ஆதிக்கச் சக்திகள் தங்களால் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் தங்களுக்குச் சரிசமமாக நடத்தப்படுவதை ஏற்க முடியவில்லை.

பல்வேறு பிரிவினையைச் சார்ந்தவர்கள் ஒரே பகுதியில் வசிக்கும்போது அங்கு சமத்துவத்தை எதிர்பார்க்கும் சூழல் அமையவில்லை.இதனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏனைய கத்தோலிக்கர்களுக்கு இணையான நிலையை அடையமுடியவில்லை. இவை அடைக்கலப்பட்டினங்கள் உருவாக காரணமாயின இதன் பொருட்டு திருநெல்வேலி பகுதியில் முதலூர், சாயர்புரம், ஆனந்தபுரம், டோனாவூர் போன்ற ஊர்கள் தோன்றின.

இங்ஙனம் கிறித்துவ சமயச் செயல்பாடுகளில் சாதிய வேறுபாடுகள் வெளிப்படத்துவங்கின. இதன் விளைவாக வழிபாட்டிற்கு ஒன்றுக்கூடினாலும் கோயில்களில் பிரிவினைச் சுவர்கள் கட்டப்பட்டு, ஒவ்வொருப் பிரிவினருக்கும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டது.இதனை

ஆ.சிவசுப்பிரமணியன் “தீண்டத்தகாத சாதியினர் சிறுதூண்களை உடைய கைப்பிடிச் சுவரினால் பிரிக்கப்பட்டிருந்தார்கள் அத்துடன் அவர்கள் அமருமிடம் சற்றுப் பள்ளமாக இருந்தது” என்று குறிப்பிடுகிறார் (கிறித்தவமும் சாதியும்:2025). இத்தகைய வேறுபாடு சிலுவை வடிவில் கட்டமைக்கப்பட்ட திருநெல்வேலி வடக்கன்குளம் ஆலயத்தில் நிலவுயிருந்தது.முன்பகுதியில் வெள்ளாளர், முதலியார், கம்மாளர் போன்றோருக்கும் பின்பகுதியில் சற்றுத் தாழ்வான இடத்தில் நாடார்களுக்கும் இரு தரப்பினருக்கிடையில் அளிபோடப்பட்டிருந்ததாக ‘கிறித்தவமும் சாதியும்’ நூலில் பதிவு செய்கிறார்.

இச்சாதிய வேறுபாடு பிரிவினைச் சுவரோடு மட்டுமல்லாது கோயில் பீடத்தில் வேலை செய்வது, பூசையில் உதவி செய்வது, பாட்டு பாடுவது, தேர் இழுப்பது, தீபம் ஏற்றுவது எனப் பல்வேறு வழிபாடுகள் சார்ந்தச் செயல்கள், மேல் சாதியினர்களுக்கு உரியதாக அமைந்தது. நன்மை வாங்கவும், குழந்தை இயேசுவின் உருவத்திற்கு காணிக்கை வைத்து முத்தமிடுவதிலும் அடித்தள மக்கள் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டனர். (ஆ. சிவசுப்பிரமணியன்:2025).

காமநாயக்கன்பட்டி ஆலயத்திலும் தெற்கு வடக்காக அளியமைத்து, கிழக்குப் பகுதியில் நாடார்களுக்கும் மேற்குப் பகுதியில் பிள்ளைமார்களுக்கென்றும் பிரிக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற பிரிவினைச் சுவர்கள் தென் தமிழகத்தில் மட்டுமல்லாது, வடபகுதியிலும் நிலவியிருந்ததைப் புதுச்சேரி ஆலயத்தினுள் நிலவியிருந்தப் பிரிவினைச் சுவர் குறித்து ஆனந்தாரங்கன் பிள்ளை தனது நாட்குறிப்பில் குறிப்பிட்டதாக ஆ.சிவசுப்பிரமணியன் சுட்டிக்காட்டுகிறார் (கிறித்தவமும் சாதியும்:2025). இந்நிலை கிறித்தவத்திலும் சாதிய வேறுபாடுகளுடனான கோயில்கள் வடிவமைக்கப்படவும், சாதிகளுக்கென்றுத் தனிக் கோயில்கள் உருவாகவும் காரணமாயின. மேலும் சாதிய ஏற்றுத்தாழ்வுகள் பிரிவினைச் சுவரோடு மட்டும் நின்று விடாமல், வழிபாடுச் செயல்கள், கல்லறை, சடங்குகள், திருவிழா, கோயில் நிர்வாகம் எனப் பல்வேறு நிலைகளில் ஆதிக்கம் செலுத்தியது.தொடக்கக்காலக் கத்தோலிக்கத் திருச்சபையில் அடித்தட்டு மக்கள் துறவறம் மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.பின்னர் அவர்களுக்கெனத் தனி துறவறச் சபைகள், தேவாலயங்களில் தனி ஆயர்களை நியமித்தல் எனத் திருச்சபையிலும் சாதியின் தாக்கம் தோன்றியது.

நெல்லை மாவட்ட சாயர்புரத் தேவாலயப் பகுதியில் நாடார் மற்றும் பள்ளர் என இரு தரப்பினர் இருந்தனர். ஆலயத்தின் முன் பகுதியில் நாடார்கள், பின்பகுதியில் பள்ளர்களின் இருப்பிடமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாடார் பிரிவைச் சார்ந்தவர்கள் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்த போதகரை வழிபாடு நடத்த அனுமதிக்காதது குறித்து வேதமுத்து என்ற மதகுரு 1867-ல் எழுதியக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்(ஆ.சிவசுப்பிரமணியன்:2025).இந்நிகழ்வு தங்களை விடச் சாதியப் படிநிலையில், கீழ்ப்படிநிலையில் உள்ள அடித்தட்டு வகுப்பினரைச் சார்ந்த போதகர்கள் தங்களுக்கு வழிபாடு நடத்துவதை உயர்சாதியினர் ஏற்றுக்கொள்ளவில்லை எனப் புலனாகிறது .இங்கனம் மதமாற்றத்திற்குப் பின்னரும் சாதிய அடையாளங்களும் அதன் அடிப்படையிலானச் சமூக

வேறுபாடுகளும் பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது என்பதை அறிய முடிகிறது.

## முடிவுரை

கிறித்தவம் மேட்டிமை வகுப்பினரின் சமூகப் பண்பாட்டு ஒடுக்குமுறைகளுக்கு இரையான அடித்தள மக்களின் முன்னேற்றத்திற்கும் பாதுகாப்பிற்கும் உரியச் சமயமாக விளங்கியப் போதிலும், சாதிய ஒடுக்குமுறை மேலோங்கியச் சமூகத்தில் மதப் பரப்புதலைக் கருத்தில் கொண்டும், மதம் மாறியவர்கள் கிறித்தவத்திலிருந்து வெளியேறாமல் இருப்பதற்காகவும்,தங்களது இருப்பை நிலைநாட்டுவதற்காகவும், சமத்துவத்தை இலக்காகக் கொண்டு மதமாற்றம் மேற்கொண்ட கிறித்தவம், சாதியை ஏற்று மேல்தட்டு மக்களுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.இந்நிலையில் கிறித்தவத்தைத் தழுவியப் பின்னரும் சமூகத்திற்குள்ளும் ஆலயத்திற்குள்ளும் சாதியின் உந்துதலும்,சாதி எந்தெந்த நிலைகளில் தொழில்படுகிறது என்பதும் புலனாகிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. ஆ.சிவசுப்பிரமணியன், கிறித்தவமும் சாதியும், ப.110.
2. ர.ஜார்ஜ், சே.ச,கழுகுமலையில் கிளர்ச்சியும் வளர்ச்சியும் 1895, ப.43.
3. ஆ.சிவசுப்பிரமணியன், கிறித்துவமும் தமிழ்ச்சூழலும், ப.33.
4. மேலது, கிறிஸ்தவமும் சாதியும், ப.95
5. மேலது, ப.60.
6. மேலது, ப.61.
7. மேலது, ப.29.
8. மேலது, ப.35.

## துணைநூற் பட்டியல் (References)


1. ஐசக் அருள்தாஸ். ஜி,குமரி மண்ணில் கிறிஸ்தவம் ,ஜி. ஐசக் அருள்தாஸ் பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 2024, கன்னியாகுமரி.629602.
2. சிவசுப்பிரமணியன். ஆ, கிறித்தவமும் தமிழ்ச்சூழலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பத்தாம் பதிப்பு 2023,
3. நாகர்கோவில்,629001.
4. மேலது , கிறித்தவமும் சாதியும், காலச்சுவடு பதிப்பகம், எட்டாம் பதிப்பு 2025,
5. நாகர்கோவில்.629001.
6. மேலது, அடித்தள மக்கள் வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,நான்காம் பதிப்பு 2023,
7. நாகர்கோவில் ,629001.
8. டேவிட் பாக்கியமுத்து ,திருநெல்வேலிக்கு கிறித்தவம் வந்தது, யாதுமாகி பதிப்பகம், ,முதற்பதிப்பு 2003,
9. திருநெல்வேலி ,627002.
10. முத்தாலங்குறிச்சி காமராசு, நெல்லை சீமையில் கிறித்தவம், காவ்யா பதிப்பகம், முதற் பதிப்பு 2025,
11. சென்னை ,600024.
12. ஜார்ஜ். ர. சே.ச, கழுகுமலையில் கிளர்ச்சியும் வளர்ச்சியும் 1895, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், , இரண்டாம் பதிப்பு 2025,
13. நாகர்கோவில் 629001.

© 2026 அனுஷா மா, முனைவர் .ஜெஸ்லின் குமார்., மி.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..